தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை

தமிழ் இணையக் கல்விக்கழகம்

இணைந்து நடத்தும்

# தொடர்பு மைய மாணவர்களுக்கான இணைய வழிப் போட்டிகள் 2023–2024



- பேச்சுப்போட்டி
- திருக்குறள் கதைகள் போட்டி
- மாறுவேடப் போட்டி



# பேச்சுப் போட்டி

| வ. எண் | சான்றிதழ்க் கல்வி | மேற்சான்றிதழ்க் கல்வி | பட்டக் கல்வி |
|---|---|---|---|
| 1. | கல்வி கண் போன்றது | தமிழ் எங்கள் உயிருக்குநேர் | தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் |
| 2. | தமிழ்மொழியின் சிறப்பு | செந்தமிழ் நாடெனும் போதினிலே | கற்றது கைம்மண்ணளவு |
| 3. | எனக்குப் பிடித்த நூல் | தமிழால் உயர்வோம் | யாதும் ஊரே யாவரும் கேளிர் |
| 4. | எனக்குப் பிடித்த தலைவர் | அறிவை விரிவு செய் | தமிழுக்கு அறம் என்று பேர் |
| 5. | அறம் செய விரும்பு | முயற்சி திருவினை ஆக்கும் | உணவே மருந்து |

# விதிமுறைகள்

- இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர பிற மாநிலங்களில் உள்ள தொடர்பு மையங்களுக்கும், வெளிநாடுகளிலுள்ள தொடர்பு மையங்களுக்கும் தனித்தனியாகப் போட்டிகள் நடத்தப்படும்.
- இப்போட்டியில் கலந்துக்கொள்ள த.இ.க.வில் மாணவராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
- திருக்குறள் கதைகள் மற்றும் மாறுவேடப் போட்டிகளில் சான்றிதழ் மற்றும் மேற்சான்றிதழ் மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம்.
- பேச்சுப் போட்டியில் சான்றிதழ், மேற்சான்றிதழ் மற்றும் பட்டக் கல்வி மாணவர்கள் பங்கேற்கலாம்.
- போட்டிகளில் பங்கேற்க நுழைவுக் கட்டணம் கிடையாது.
- த.இ.க.வின் இணையதளத்தில் பதிவுப் படிவத்தைப் பூர்த்தி செய்து வழங்க வேண்டும்.

❖ மாணவர்கள் தங்களது பதிவுகளை 3-5 நிமிடங்கள் கொண்ட காணொலியாகப் பதிவு செய்து, 30.11.2023க்குள் இந்திய நேரப்படி இரவு 12 மணிக்குள் பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்.

❖ போட்டியில் பங்கேற்கும் அனைவரும் தமிழ்மொழியில் மட்டுமே காணொலிகள் பதிவேற்ற வேண்டும்.

❖ போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்குப் பிரிவு வாரியாகப் பரிசு மற்றும் மின்சான்றிதழ் வழங்கப்படும்.

1 ரூ. 15,000

2 ரூ. 12,000

3 ரூ. 10,000

❖ இதில் வரிகள் உட்பட அனைத்து பரிமாற்றக் கட்டணங்களும் அடங்கும்.

❖ போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசுத்தொகை வங்கிக்கணக்கில் மின்னணுப் பணப் பரிவர்த்தனை மூலமாகச் செலுத்தப்படும்.

❖ வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு தங்களால் கடிதம் மூலம் பரிந்துரைக்கப்படும் நபரின் வங்கிக் கணக்கில் மின்னணுப் பணப் பரிவர்த்தனை மூலம் பரிசுத்தொகை செலுத்தப்படும்.

❖ இந்தியாவில் உள்ள வங்கியில் செலுத்தப்படும் பரிசுத்தொகையில் 30%, வெளிநாடுகளில் உள்ள வங்கியில் செலுத்தப்படும் பரிசுத்தொகையில் 31.5% வரிப் பிடித்தம் செய்யப்படும்.

❖ போட்டிகளில் பங்கேற்கும் அனைவருக்கும் பங்கேற்பு மின்சான்றிதழ் வழங்கப்படும்.

❖ போட்டியில் தேர்வு செய்யப் பெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியல் மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

❖ போட்டி முடிவுகள் குறித்து தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முடிவே இறுதியானது.

போட்டிகளுக்கான இணைப்பு : https://forms.gle/LP2TLZMuBfbw8sfq5

மேலும் விவரங்களுக்கு :

+91 86678 22210 tpktva@gmail.com